**செ. கு. எண்: 121** **நாள்: 22.07.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 22.7.2018

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், ஆழியாளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.குழந்தைவேல் என்பவரின் மகன் திரு. மாதேஸ் என்பவர் இன்று (22.7.2018) அதிகாலை தனது விவசாய நிலத்திற்கு செல்லும் போது, எதிர்பாராதவிதமாக காட்டுயானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன்.

காட்டுயானை தாக்கியதில் உயிரிழந்த திரு. மாதேஸ் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. மாதேஸ் அவர்களின் குடும்பத்திற்கு நான்கு லட்சம் ரூபாய் வனத் துறை மூலம் உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**